கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திரு.பெ.பார்த்தசாரதி, பி.எல்,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, சிவகங்கை

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ம் நாள் செவ்வாய்க்கிழமை

2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், ஐப்பசி திங்கள் 25–ம் தேதி

இடைநிலை மனு எண்.1/2024

இன்

அசல் வழக்கு எண்.82/2023

* * * * *

அருணாச்சலம் .......மனுதாரர்/வாதி

/ எதிர் /

பழனியப்பன் .......எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 27.10.2025ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.V.சங்கர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>உ த் த ர வு</u>**

இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாமல் 30 நாட்கள் கடந்த நிலையில் தற்பொழுது பதிலுரை தாக்கல் செய்ய வேண்டி கோரி மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

கடந்த 11.12.2023–ம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதி தரப்பில் Reply

Statement தாக்கல் செய்யாமல் 30 நாட்கள் கடந்த நிலையில் தற்பொழுது மனுதாரர்/வாதி தரப்பில் Reply Statement தாக்கல் செய்ய வேண்டியுள்ளது. இதில் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு யாதொரு ஆட்சேபனை இருக்கக் கூடியதில்லை. எனவே இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாமல் 30 நாட்கள் கடந்த நிலையில் தற்பொழுது பதிலுரை தாக்கல் செய்ய வேண்டி கோரி மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:—</u>

அசல் வழக்கானது பொய்யான சங்கதிகளுடன் மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படியான சங்கதிகளானது பொய்யான சங்கதிகள் என்பதையும், மேற்படியான வழக்கு தொடர்பான ஆவணங்கள் அனைத்தும் போலியாக புனையப்பட்டது என்பதையும் குறிப்பிட்டு தான் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரை தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும். எதிர்வழக்குரைக்கு எதிராக மனுதாரர்/வாதியால் போலியான சங்கதிகளுடன் ஒரு பதிலுரையானது போலியான சங்கதிகளை குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதி சார்பில் அசல் வழக்கில் 11.12.2023—ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளுக்கு எதிராக பதிலுரை தாக்கல் செய்யாமல் 30 நாட்கள் கடந்து தற்போது பதிலுரை தாக்கல் செய்துள்ளதால் இந்த பதிலுரையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மனு

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY Date: 2025.11.11 17:22:00 +0530

தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) எதிர்மனுதாரர்/பிரதிவாதி சார்பில் பதிலுரை போலியான சங்கதிகளை குறித்து சொல்லப்பட்டுள்ளது. பதிலுரை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள இயலாத ஒன்று. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிடப்பட்டது.

7) மனுதாரர்/வாதி பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானதானா? ஏற்றுக்கொள்ளகூடியதா? என்பது குறித்து வழக்கெழுவினா வனைந்து, சாட்சிகள் விசாரணையில் முடிவு செய்து கொள்ள முடியும். தற்போது அசல் வழக்கு வழக்கெழுவினாக்கள் வனைவதற்காக நிலுவையில் உள்ள நிலையில் பதிலுரை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்/வாதி பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகளையும் சேர்த்து வழக்கெழுவினா வனைந்து சாட்சி விசாரணை செய்யலாம் என்று முடிவு செய்து நீதியின் நலனை கருத்தில் கொண்டும் இம்மனுவை அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

**8) இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்து வடிவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:22:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு
சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – **இல்லை**.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:22:23 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**

**சிவகங்கை**

**இடைநிலை மனு எண்.1/2024**
**இன்**

**அசல் வழக்கு எண்.82/2023**

**நாள்.11.11.2025**